எனது வாழ்க்கையே எனது செய்தி

# காந்தீயம்

அகில இலங்கை காந்திசேவா சங்கத்தின் இரு திங்கள் வெளியீடு

Publication of All Ceylon Gandhi Seva Sangam

மலர் – 23 இதழ் – 02, 03. டிசெம்பர் 2007, ஜனவரி – பெப்ரவரி – மார்ச் 2008 விலை ரூபா 10/-

## யாழ்ப்பாணத்தில் சிறப்புற நடைபெற்ற உலக அஹிம்சா தினமும் காந்தி ஜெயந்தியும்

(யாழ். நிருபர்)

அகில இலங்கை காந்திசேவா சங்கம், ஐப்பசி 2 உலக அஹிம்சா தினமாக ஐக்கிய நாடுகள் சபையினால் பிரகடனம் செய்யப்பட்டதை ஒட்டி அதனை இளம் தலைமுறையினரிடையே பிரபலப்படுத்த ஏற்பாடுகளைச் செய்தது.

139 மரக்கன்றுகள் நடுகை, மாணவர் பேச்சுக்கள் முதலியன நடாத்துவது பற்றிய சுற்றறிக்கையை மாகாண உதவிக்கல்விப் பணிப்பாளரின் அனுமதியுடன், பிரதேச கோட்டக்கல்வித் திணைக்களங்களுக்கூடாக, பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைத்தது. சங்கம் மாகாண உதவிக்கல்விப் பணிப்பாளர் மூலம் பிரசார முயற்சிகளுக்கு அனுமதி பெற்றது. அவர் வழிகாட்டலில் பல பிரதேச கல்விப்பணிமனைகள் ஐப்பசி இரண்டை மாணவரிடையே நினைவு கூரும் செயற்பாடுகளைப் பாடசாலை மட்டத்தில் நிகழச் செய்தன.

தென்மராட்சி இளம் உதவிப்பணிப்பாளரின் முன்முயற்சியைப் பின்பற்றி, பிற அதிகாரிகளும், சிறிய கால இடைவெளியில் பாடசாலைகளில் வைபவங்களை ஏற்பாடு செய்தனர். சங்க அங்கத்தவர் தத்தம் பிரதேச பாடசாலை மாணவர்களிடையே பேச்சு, மரம் நடுகை, காந்தி நினைவுப் பாடல்கள் நடைபெற உதவினர். விளையாட்டுப் போட்டிகள், தமிழ், ஆங்கில தினப்போட்டிகள் போன்ற வழக்கமான நிகழ்ச்சிகளில் பல மாணவரும் கலந்த போதிலும், இயன்ற சிறுகுழுக்கள் காந்திய விழிப்புணர்வுச் செயற்பாடுகளை மேற்கொண்டனர்.

“மில்க்வைற்” நிறுவனத்தை நடாத்தும் சமூகத் தொண்டர் இ.தவகோபால் 139 மரக்கன்றுகள் நடும் திட்டத்திற்கு ஏற்பாடு செய்தார். சங்க உறுப்பினர்கள் பாடசாலைகளில் நடந்த நிகழ்வுகளில் பங்கு பற்றினர். மாணவர்களுக்கு பேச்சுக்கள் பழக்க உதவினர். மாணவர்களுக்கு வாசிப்புப்பழக்கத்தை ஏற்படுத்தும் நூலக வார நிகழ்ச்சிகளின் போது காந்தீயம் பற்றிய சிறுவர் நூல்கள் பற்றாக்குறை இங்கு கடுமையாக நிலவுவது கவனிக்கப்பட்டது.

உபதலைவர் ஆ.வடிவேலு யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள காந்தி உருவச்சிலைக்கு மாலை சூடியபின், நினைவுக்கூட்டம் காந்தி நிலையப் பணிமனையில் நடைபெற்றது. இளம் தலைமுறையைச் சேர்ந்த ஒரு மாணவனும் மாணவியும் பேசிய போதும் காந்தீயம் பற்றிய சிறுவர் நூல்கள் பற்றாக்குறையைச் சுட்டிக்காட்டினர். சிறுவர் இலக்கியத்துறையில் காந்திய நூல்களைத் தேடிப்பெற்று பாடசாலைகள், சனசமூக நிலையங்களில் வைத்தல் அவசியம் எனக் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது. தற்கால அவசர உலகிற்கு ஏற்ப, சிறுவர் நூல்களில் காந்திஜீயின் வாழ்க்கை, சித்திரப்படங்களுடன் வெளிவந்துள்ளவற்றை வாசகர் கைக்கு இலகுவில் கிடைக்க வழி செய்ய முயற்சி எடுப்பது எனத் தீர்மானிக்கப்பட்டது. அடுத்த ஆண்டு காந்தி தினத்தின் முன் காந்தி நினைவுப் போட்டிகள் மாணவர் இடையே ஏற்பாடு செய்து பரிசு வழங்க வேண்டும். அதுவே அகிம்சா வழி விழிப்புணர்ச்சிக்கு உதவும் எனவும் முடிவு செய்யப்பட்டது. இச்செயற்பாடுகளுக்கு அர்ப்பணிப்புடன் கூடிய இளைஞர் குழாம் ஒன்றைத் தேடிப் பயிற்ற வேண்டும் என்பது நிதர்சனமாயிற்று. சில முதிய பழுத்த காந்திய வாதிகள் கூடிப்பேசி, மாலை சூட்டி, “இரகுபதிராகவ” பாடிச் சென்று உறங்கும் காலமும் முடிவுக்கு வருமுன் இளைஞர் பத்துப்பேரையாவது பயிற்ற வேண்டும் என ஏகமனதாக ஒப்புக்கொள்ளப்பட்டது.

கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாலயத்தில் அதிபர் க.செல்வக்குமாரன் தலைமையில் அஹிம்சை தினம் கொண்டாடப்பட்டது. உபதலைவர் ஆ.வடிவேலு சிறப்புச் சொற்பொழிவு ஆற்றினார். காந்திஜீயும் வள்ளுவமும் பற்றிய ஆழமான விரிவுரை ஒலிப்பதிவு செய்யப்பட்டது. மரம் நாட்டு விழாவும், மாணவர் பேச்சும் நிகழ்ந்தன. “சிறியது அழகியது” என்ற ஷூமேக்கர் கருத்துப்படி அச்சிறு பாடசாலையின் செயற்பாடு மிகச் சிறப்பாகவும் ஆசிரியர்களின் பூரண ஒத்துழைப்புடனும் நடந்தது மெச்சத்தக்கது.

பருத்தித்துறையில் ஹாட்லி, வடமராட்சி மகாவித்தியாலயம் ஆகிய கல்லூரி உயர்வகுப்பு மாணவர்களும், ஆசிரியர்களும் வங்கிகளின் தலைவர்களும் கூடி காந்திஜீயின் உருவச்சிலைக்கு மாலையிட்டு நகர மத்தியில் சிறுகூட்டம் நடாத்தினர்.


போரின் மத்தியிலும் இச்செயற்பாடுகளுக்கு இடம் அளிக்கப்பட்டதே காந்தியடிகளின் அஹிம்சா சத்திய நெறியின் வெற்றிதான். ஆனால் இக்கருத்தின் விரிவைப் பொறுத்தே நாளைய சமுதாயம் சமாதானத்தின் அரவணைப்பில் வாழமுடியும் என்பது வற்புறுத்தப்பட்டது.

### சர்வோதய தினம் 2008 ஜனவரி 30

மகாத்மா காந்தியடிகளின் சிரார்த்த தினம் ஜனவரி மாதம் 30 ஆம் திகதி உலகளாவிய ரீதியில் சர்வோதய தினமாக அனுஷ்டிக்கப்படுகிறது. இவ்வருடம் அடிகளாரின் 60 ஆவது நினைவு ஆண்டாகும்.

**கடமையைச் சரிவரச் செய்யுங்கள்**

# கொள்கை உறுதியிற் பெருமலை பெரும் புலவர் சிவங்கருணாலய பாண்டியனார்



பெரும்புலவர் சிவங் கருணாலய

**பாண்டியனார் அவர்கள்**

**தோற்றம்** 1903.08.09 **மறைவு** 1976.06.30




யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் **சு.வித்தியானந்தன் அவர்கள்** கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் . 1988.09.25 இல் “புலவர் பாண்டியனார் நினைவுப் பேருரை” யை நிகழ்த்துகிறார். தமிழ்ச்சங்கத் தலைவர்கள் து.தருமராசா மற்றும் செ.குணரத்தினம் ஆகியோர் மேடையில் அமர்ந்திருக்கிறார்கள்.

புலவர் சிவங் கருணாலய பாண்டியனார் சங்ககாலப் புலவர்களுக்கு ஒப்பான பெரும் புலவர். தமிழ்மொழி, வடமொழி நூல்களை நன்கு கற்றவர். நூல்களில் உள்ளவை அனைத்தும் அவரது உள்ளத்தில் நன்கு நிலைத்திருக்கும். புலவர் பாண்டியனார் புலமையிற் பெருங்கடல். கொள்கை உறுதியிற் பெருமலை. சிறந்த பாக்களை யாத்தலில் வல்லுநர்..

புலவர் பாண்டியனார் எளிமையான தோற்றமும் வாழ்வு நெறியும் உடையவர். பற்றற்றஞானி, தமிழ் முனிவர். தமிழே அவருக்கு உயிர். தூய தமிழில் மிக்க பற்றுள்ளவர். சிறந்த பல நூல்களை எழுதியுள்ளார். இவர் சிறந்த சமய அறிஞரும் ஆவார். தமிழகத்திற் பிறந்து கல்வி பெற்ற பாண்டியனார் இலங்கைத் தலைநகரிற் தம் ஆசிரியத் தொழிலையும் தம் தமிழ்ப்பணிகளையும் மேற்கொண்டு இலங்கையைத் தம் நாடாகக் கொண்டார். தமிழுக்காகவே வாழ்ந்தார். இலங்கையிற் சிறந்த தமிழ் மாணவ பரம்பரையை உருவாக்கினார். இலங்கை, புலவர் பாண்டியனாருக்குப் பெரிதும் கடமைப்பட்டுள்ளது.

புலவர் பாண்டியனார் கொழும்புத் தமிழ்ச்சங்கத்தோடு நீண்ட காலத் தொடர்புள்ளவர். கொழும்பு தமிழ்ச்சங்கத்திற் பல ஆண்டுகளாகத் தமிழ் வகுப்புகளை நடத்தி வந்தார். இவர் தமிழுலகிற்கு ஆற்றிய தமிழ்ப்பெரும் பணிகளுக்காக இவரது உருவப்படம் கொழும்பு தமிழ்ச்சங்கத்தில் இடம்பெற்றுள்ளது. இவரது புதல்வர் இருவரதும் துணையோடு கொழும்புத் தமிழ்ச்சங்கம் இலங்கையில் வெளிவரும் சிறந்த செய்யுள் இலக்கிய நூலுக்குப் பரிசில் வழங்கிவருகிறது.

க.இ.க.கந்தசுவாமி
பொதுச்செயலாளர்
கொழும்புத் தமிழ்ச்சங்கம்

*01.12.1989*

“காந்தீயம்” 1948 முதல் வெளிவந்தது. இடையில் சிறிது காலம் வெளிவராது நின்றது. 1968 இல் அதனை மீண்டும் தொடங்கி நடத்த விரும்பிய காந்திய அன்பர்கள் புலவர் கருணாலய பாண்டியனாரை அணுகி, ஆசிரியப் பணியை ஏற்குமாறு வேண்டினர். அவர் மகிழ்ச்சியுடன் அதற்கு உடன்பட்டார்.

ஐப்பசி 1968 இல் (மலர்-6, இதழ் -1) வள்ளுவரும் காந்தியடிகளும் என்ற அவரது கட்டுரை ஆசிரியத் தலையங்கமாயிற்று. அடுத்த இதழில் காந்தியடிகளும் மதுவிலக்கும், 1969 தை இதழில் சர்வோதயம் என்பன வெளிவந்தன. அவர் தனது நேசம் மிக்க மாணவர் இ.இரத்தினம் அவர்களைப் பத்திரிகையின் ஆசிரியத் தலையங்கங்களை எழுதும்படி பணித்தார். அதன்படி 1969 மாசி இதழ் முதல் இரத்தினம் ஆசிரியத் தலையங்கங்களை எழுதி வந்தார்.
**(‘சத்தியவிஞ்ஞானம்’ பதிப்புரையிலிருந்து)**

**படிப்பினை**

காந்தியைப் போல் அதிகாலை விழிக்க வேண்டும்
கடவுளென்ற கருணையை நாம் கருத வேண்டும்
காந்தியைப் போல் காற்றாட உலவ வேண்டும்
களைதீரக் குளிர் நீரில் முழுகவேண்டும்
காந்தியைப் போல் அளவாகப் புசிக்க வேண்டும்
கண்டதெல்லாம் தின்னாமை காக்க வேண்டும்
காந்தியைப் போல் ஒழுங்காகத் திட்டம் போட்டு
காரியங்கள் செயல்முறையில் கடமை வேண்டும். (தொடரும்)

**நாமக்கல் கவிஞர் அவர்களின் “காந்தி அஞ்சலி” என்னும் நூலிலிருந்து எடுக்கப் பெற்றது.**

எனது வாழ்க்கையே எனது செய்தி

# காந்தீயம்

காந்தி ஆண்டு 139, டிசம்பர் 2007 - ஜனவரி, பெப்ரவரி, மார்ச் - 2008

## அறுபதாவது அகவையில்

1949ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட அகில இலங்கை காந்தி சேவா சங்கம் இவ்வாண்டு தனது ஐம்பத்தொன்பதாவது அகவையைப் பூர்த்தி செய்து அறுபதாவது ஆண்டில் காலடி பதிக்கிறது. இந்த நல்ல பொழுதிலே உயர் இலட்சியங்களோடு சங்கத்தை ஆரம்பித்த பெரியோர்களை நினைவிற் கொண்டு எமது எதிர்காலப் பணிகளைச் சிறப்பாக முன்னெடுப்பதற்கு உறுதிகொள்கிறோம்.

காந்திய இயக்கத்தின் உள்ளுணர்வின் வெளிப்பாடாக 1949ம் "ஆண்டு ஏப்ரல் 2ம் திகதி யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் நடைபெற்ற கூட்டத்தில் அகில இலங்கை காந்தி சேவா சங்கம் ஆரம்பிக்கப்பட்டது.

மகாத்மா காந்தியுடன் 1927 முதல் தொடர்புற்றிருந்த ஹன்டி பேரின்பநாயகம் முதலாவது தலைவரானார். சோ.க.தம்பிப்பிள்ளை, சி.க.வேலாயுதபிள்ளை, நா.சிவபாதசுந்தரம் போன்ற காந்திய அபிமானிகள் சங்கத்தை நிறுவுவதில் தமது தீவிர முயற்சியைச் செலுத்தியிருந்தனர்.

சர்வோதய தத்துவ நெறிமுறைகளை இலங்கையில் பரப்பி சர்வோதய சமூகத்தை அமைப்பதே சங்கத்தின் நோக்கமாக இருந்தது. ஆரம்பத்தில் சர்வோதய தத்துவத்தைப் பரப்பிக் கருத்துப் புரட்சியை மக்களிடையே ஏற்படுத்துவதற்கான பணியில் சங்கம் ஈடுபட்டது.

"காந்தீயம்" சஞ்சிகை அகில இலங்கை கருணைக் கழகத்தின் தேசிய திங்கள் இதழாக 1948 முதல் யாழ்ப்பாணம் நீர்வேலியில் இருந்து வெளிவந்து கொண்டிருந்தது. பின்னர் "காந்தீயம்" சங்கத்தின் பிரசார ஏடாக மாறியது. நீர்வேலி, உருத்திரபுரம், கொழும்பு ஆகிய இடங்களிலிருந்து "காந்தீயம்" பிரசுரமானது. 1985களில் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக சங்கத்தின் செயற்பாடுகளைப் படிப்படியாகக் குறைக்க வேண்டிய நிலை தோன்றியது. காந்தீயமும் வெளிவராது தடைப்பட்டது.

2004 ஆகஸ்ட் 22 இல் சங்கம், இன்றைய தலைவர் சோ.க.தம்பிப்பிள்ளை மற்றும் ஆ.சபாரத்தினம் இன்னும் பல அன்பர்களின் அயராத உழைப்பினால் மீண்டும் புத்துயிர் பெற்றது. அண்மையில் சமாதியடைந்த கந்தர்மடம் வேதாந்த மடத்தின் குருபீடாதிபதி ஸ்ரீமத் சோமஸ்கந்தவேள் சுவாமிகள் மடத்தின் ஒரு பகுதியை சங்கத்தின் செயற்பாடுகளுக்காக ஒதுக்கித் தந்தார்கள். யாழ் நகரிலுள்ள அலுவலகத்தில் சங்கம் இயங்கத் தொடங்கும் வரை சுமார் ஒரு வருட காலமாக சங்கத்தின் சகல நிகழ்வுகளும் மடத்திலேயே இடம்பெற்றன.

சங்கம் மீளமைப்புச் செய்யப்பட்டதைத் தொடர்ந்து தி.உதயசூரியன் காந்தீயத்தின் ஆசிரியராக நியமிக்கப்பட்டார். 2004 ஐப்பசி 2 இல் காந்தீயத்தின் மலர் 19, இதழ் 01 வெளியானது. தொடர்ந்து இருமாதங்களுக்கு ஒருமுறை காந்தீயம் வெளிவந்து கொண்டிருந்தது. 2006 ஆகஸ்ட் மாதம் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட நெருக்கடி நிலை காரணமாக 2007 ஜனவரி இதழ் கிளிநொச்சியிலிருந்து பிரசுரமானது. தொடர்ந்து சில வசதிகள் கருதி அச்சுப்பணியை வவுனியாவுக்கு மாற்றுவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. அதன்படி வவுனியாவிலிருந்து 5 ஆவது இதழ் உங்கள் கைகளில் தவழ்கிறது. காந்தீய அன்பர்களதும், அபிமான வாசகர்களதும் ஆக்கபூர்வமான ஆலோசனைகளும், வாழ்த்து மடல்களும் எம்மை இப்பணியில் மேலும் உற்சாகப்படுத்தியுள்ளன. அன்பு, சத்தியம், அஹிம்சை போன்ற உயர் விழுமியங்களில் நாட்டம் கொண்ட பலர் எமது சங்கத்தில் தம்மை அங்கத்தவராக இணைத்து வருகின்றனர். பள்ளிக் கூடங்களிலும், கல்லூரிகளிலும் இருந்து மாணவ மாணவிகள் சங்க அங்கத்துவத்தைப் பெறுவதோடு மட்டுமல்லாமல் காந்தியின் வாழ்க்கை வரலாற்றையும் அவரின் சிந்தனைகளையும் அறிவதில் ஆர்வம் காட்டுகின்றமை எமக்கு மனநிறைவைத் தருகின்றது.

அகில இலங்கை காந்தி சேவா சங்கம் ஆற்றிய பணிகள் ஓரிரு பக்கங்களில் அடக்கக் கூடியவை அல்ல. 1965 ஆம் ஆண்டு சங்கத்தின் வெளியீடாக வந்த "16 ஆண்டுகளாக" என்ற மலர்சங்கத்தின் பணிகளை விரிவாக வெளிக்கொணர்ந்திருந்தது. இம்மலரின் வெளியீட்டுக்கு 1965 இல் சங்க நிர்வாகிகளாக இருந்த கு.நேசையா, ச.சோமசுந்தரம், முதலியார் செ.சின்னத்தம்பி, சோ.க.தம்பிப்பிள்ளை, சி.க.வேலாயுதபிள்ளை, வே.கதிரவேலு, பொ.கந்தையா (காந்தி மாஸ்ரர்) பண்டிதர் அ.ஆறுமுகம், இ.கந்தையா, ஆ.மார்க்கண்டன், பண்டிதர்.செ.துரைசிங்கம், த.நல்லதம்பி, பண்டிதை சத்தியதேவி துரைசிங்கம், திருமதி புஸ்பராணி கந்தசாமி, டாக்டர்.ச.அம்பலவாணர் போன்றோரினதும் கொழும்புக் கிளை, திருகோணமலைக்கிளை உறுப்பினர்களதும் அரும்பணி காரணமானது.

1968-1978 காலப்பகுதியில் "காந்தீயம்" பத்திரிகையின் ஆசிரியர்களாக இருந்த புலவர் பாண்டியனார், இ.இரத்தினம் ஆகிய இருவரும் எழுதிய ஆசிரியத் தலையங்கங்களைத் தொகுத்து "சத்திய விஞ்ஞானம்" என்ற நூலை சங்கம் 2005 இல் வெளியிட்டது. இப்பாரிய பணியினை செவ்வனே நிறைவேற்றுவதற்கு ஒத்துழைப்பு நல்கிய நூலின் பதிப்பாசிரியர்களுக்கும் ஏனைய உறுப்பினர்களுக்கும் சங்கம் இவ்வேளையிலே நன்றி தெரிவிக்கின்றது.

இந்தியப் பிரதமர் ஜவஹர்லால் நேருவை 1950 தைமாதம் எமது சங்கப் பிரதிநிதிகள் கொழும்பு இராணி மாளிகையில் சந்தித்த போது அவர் காந்திஜீயின் நிர்மாணத் திட்டங்களை முன்னெடுக்கும்படி வற்புறுத்தியதை நினைவில் கொண்டு எமது பணிகளை முன்னெடுக்க திடசங்கற்பம் பூணுவோமாக. மணிவிழா ஆண்டில் காலடி வைக்கும் "காந்தீயம்" தொடர்ந்தும் சிறப்புற வெளிவர சங்க அங்கத்தவர்களதும் வாசகப் பெருமக்களதும் ஆதரவை வேண்டி நிற்கின்றோம்.

எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி

# சுதந்திரத்தின் சிற்பி மகாத்மா காந்தி

இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் போர்பபந்தர் என்னுமிடத்தில் 1869ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 2ம் திகதி மகாத்மாகாந்தி பிறந்தார். இவருக்கு பெற்றோர் இட்ட பெயர் மோகனதாஸ் என்பதாகும். காந்தி என்பது அவரது குடும்பப்பெயராகும். இவர் தனது ஆரம்பக்கல்வியை உள்ளூரிலே பெற்றுக் கொண்டார். தனது இளம் பராயத்திலே சுறுசுறுப்பு மிக்கவராகவும் அயலவருக்கு தொண்டாற்றுபவராகவும் தாய் நாட்டிற்கு ஏதாவது செய்ய வேண்டும் என்ற எண்ணம் கொண்டவராகவும் இருந்தார்.

மகாத்மா காந்தி உண்மை பேசுபவராகவும் பெற்றோருக்கு கீழ்ப்படிந்து வாழ்பவராகவும் விளங்கினார். இப்பராயத்திலே இவருக்கு அக்கால வழக்கத்தின்படி கஸ்தூரி என்ற பெண்ணை திருமணம் செய்து வைத்தார்கள். மகாத்மா காந்தியடிகள் தொடர்ந்து உயர் சட்டக் கல்வியினை கற்பதற்காக இங்கிலாந்திற்கு சென்றார். மூன்று ஆண்டுகள் இங்கிலாந்தில் சட்டப்படிப்பை முடித்த அவருக்கு இங்கிலாந்து சட்டக்கல்லூரி பாரிஸ்டர் பட்டம் கொடுத்தது.

பட்டம் பெற்று இந்தியாவிற்கு மீண்டும் திரும்பிய மகாத்மா காந்தியடிகள் இந்தியாவில் வழக்கறிஞர் தொழிலில் ஈடுபட்டார். ஒரு வழக்குத் தொடர்பாக காந்தி தென்னாபிரிக்காவுக்கு சென்றார். தென்னாபிரிக்காவில் வாழ்ந்து வந்த இந்தியர்களை தாழ்வாக நடத்தியதைக்கண்டு வேதனைப்பட்டார். அவர்களது துன்பங்களைப் போக்க சத்தியாக்கிரக வழியில் நின்று துயர் துடைக்க முனைந்து வெற்றி கண்டார்.

மகாத்மா காந்தி அடிகள் இந்தியாவை அன்னியர்கள் ஆட்சிக்கு உட்படுத்தியிருந்த போது இந்திய மக்களை மீட்டு, ஒரு நிரந்தரமான சுதந்திரத்தோடு மக்கள் வாழ வேண்டும் என்ற குறிக்கோளுடன் அன்னியர்களை எதிர்த்து உண்ணாவிரத அஹிம்சைப் போராட்டம் நடத்தினார். இதனால் அவர் பல முறை சிறைவாசம் அனுபவித்தார். காந்தி அடிகளின் உண்மையான குறிக்கோளும் நாட்டுப்பற்றும் அஹிம்சைப் போராட்டமும் அன்னிய ஆட்சியில் இருந்த இந்தியாவிற்கு 1947ம் ஆண்டு மே மாதம் 15ம் திகதி சுதந்திரம் பெற்றுக் கொடுத்தது. அது மட்டுமின்றி அவரது போராட்டமும் அஹிம்சை வழியும் எமது நாடான இலங்கையும் அன்னியர் ஆட்சியில் இருந்து 1948ம் ஆண்டு 2ம் மாதம் 4ம் திகதி சுதந்திரம் பெற காரணமாய் அமைந்தது.

காந்தி அடிகள் சத்தியமே கடவுள் என வாழ்ந்து வந்தார். அவர் தமது வாழ்க்கை வரலாற்றை சத்திய சோதனை எனும் நூலாக எழுதினார். பாரத நாடு மட்டுமன்றி உலகம் முழுவதும் அடிகளாரைப் போற்றுகின்றது. மகாத்மா காந்தியடிகள் மண்ணை விட்டு மறைந்தாலும் அவர் ஆற்றிய அரும்பெரும் சேவை என்றுமே அழியாத நினைவுச் சுவடுகளாக ஆழமாக எம் மனதில் பதிந்துள்ளது. இவ்வுலகில் எவராலும் மறந்துவிட முடியாத உத்தமராக மகாத்மாகாந்தி போற்றப்படுகிறார்.

**யே.ஜீவினி**
**தரம் 11**
**செட்டிகுளம் மகாவித்தியாலயம்.**

---

(7ம் பக்க தொடர்ச்சி: **சமுகப்பணிகளின்....**)

"மில்கவைற் செய்தி" எனும் பெயரில் அரிய பல விடயங்களையும் தொகுத்து மூதறிஞர் க.சி.குலரத்தினம் பெரியாரை ஆசிரியராகக் கொண்டு சிறந்த பல்துறைப் பத்திரிகையாக மாதந் தோறும் வெளியிட்டமையும், இப்பத்திரிகைகளை இன்றும் நாம் தேடிப் பாதுகாக்கக் கூடியதான தேவையுள்ளதாகவும் செய்து வைத்தமையும் பெரியார் கனகராசா இறவாப்புகழ் பெற்றுள்ளதனை எமக்கு எடுத்துக் காட்டுகின்றது.

மேலும் தமிழகத்திலிருந்து ஈழத்திற்கு வரும் தமிழ்ச் சான்றோர்களையும் சமயப் பெரியார்களையும் வரவேற்று அவர்களிடம் பெறும் நல்லாலோசனைகளைப் பிறருக்கும் பகிர்ந்து கொடுத்த பெருந்தன்மை பெரியார் கனகராசாவிடம் நிறைந்திருந்தது.

பெரியார் சிவநெறிப்புரவலர், சிவதர்மவள்ளல் கந்தையாபிள்ளை கனகராசா அவர்களின் பணிகளை இலங்கை அரசினரும் பெருமைப்படுத்தித் சமாதான நீதிவான் பட்டமும் வழங்கிக் கௌரவித்தனர்.

பெரியார் கனகராசா அவர்களது பணிகளைப் பல்துறைப்பட்டதாக ஒரு வரலாற்று நூலே எழுதலாம். ஒரு சில பக்கங்களில் அவரது பணிகளை அடக்குவது உண்மையில் இயலாததாகும். இதில் பரந்துபட்ட சிறுசிந்தனைச் சிதறல்களையே எடுத்துத் தந்துள்ளோம்.

தமிழ்ப் பொது மறையாம் திருக்குறளிற் சில குறட் பாடல்கள் பெரியார் கனகராசாவின் பணிகளை எடுத்து விளக்குவனவாயுள்ளன.

"அற்கா இயல்பிற்குச் செல்வம் அதுபெற்றால்
அற்குப ஆங்கே செயல்"
"ஊருணி நீர் நிறைந்தற்றே உலகவாம்
பேரறிவாளன் திரு"
"சுற்றத்தார் சுற்றப்பட ஒழுகல் செல்வந்தான்
பெற்றத்தால் பெற்ற பயன்"
"பயன்மர முள்ளூர்ப் பழுத்தற்றாற் செல்வம்
நயனுடையான் கட்படின்".

**நீர்வைமணி**

---

## கீதையின் சாரம்

ஒரு முறை காந்தியடிகள் ஆச்சிரமத்தில் இருந்தபோது ஒரு தாய் மகனுடன் வந்து காந்தியடிகளிடம் "இவனுக்குப் பகவத்கீதையைப் பற்றிக் கூறவேண்டும்" என்று கேட்டுக்கொண்டார். காந்திஜி அந்த இளைஞனை அழைத்து குவியலாகக் கிடந்த செங்கற்களைக் காட்டி, அவற்றை அடுக்கி வைக்கச் சொன்னார். அவ்வாறே அடுக்கினான். மாலை நேரம் வந்தது இளைஞன் "ஐயா பகவத்கீதை" என்று கேட்க "நாளைக்கு வா சொல்கிறேன்" என்றார். மறுநாளும் அதே போல சங்கற்குவியலை அடுக்கினான். இரவு வந்தது வீடு சென்றான். அடுத்த நாளும் எதுவும் பேசாமல் செங்கல் குவியலை அடுக்கிவிட்டு "ஐயா நான் கேட்ட பகவத்கீதை" என்று கேட்க அமைதியாகச் சொன்னார் காந்திஜி "நான் பகவத்கீதை கூறி முடித்துவிட்டேன்" அதிர்ந்து போன இளைஞன் காந்திஜியை ஆச்சரியமாகப் பார்த்தான். "தன்கடமையை ஒழுங்காகச் செய்வதும் எதுவித பலனை எதிர்பாராமல் செய்வதும் தான் பகவத்கீதையின் சாரம்".

# சர்வதேச தாய்மொழித்தினம் (2007)

உலக மயமாதலின் மொழிசார் பரிமாணமாக (அமெரிக்க) ஆங்கில மொழியை உலக மக்களிடையே திணிக்கும் முயற்சி வெகுவேகமாக நடைபெற்று வருகின்றது. இந்த வேகம் காரணமாக, அடுத்த நாற்பது ஆண்டுகளில் உலகின் பெரும்பாலான மொழிகள் அழிந்துவிடும் என்று ஒரு கணிப்பு கூறுகிறது. கணனியுகத்தில் ஒரு சில பெரிய வல்லரசுகளின் மொழிகளை விட, மற்றவை. அவை எவ்வளவு பழைய இலக்கிய, சமய தத்துவக் கருவூலங்களைக் கொண்டிருந்தாலும், பயன்படுத்தப்படாமல் அழிவுற்றுப்போகும் என்கிறார்கள்.

காட்டுமிராண்டி மனிதனுக்கும் தன் வளர்ச்சியடையாத ஆரம்பநிலையிலுள்ள மொழி எனினும், அது தொடர்பாடலுக்கு இலகுவாய் இருக்கிறது என்ற காரணத்தால் அதைக் கைவிட மனம் வருவதில்லை. மனித சிந்தனையின் உச்சியில் இருந்தவர்கள் தம் மொழியின் மூலம் அதி உன்னத கருத்துக்களை மனித சமுதாயத்திற்கு இன்றும் என்றும் பண்பு பயக்கும் எண்ணங்களை வெளியிட்டனர். ஆனால் அம்மொழி நவீன மொழி ஏகாதிபத்தியத்தின் வன்மைமிக்க இராட்சத கரங்களில் அகப்பட்டு நசுங்கிப் போகும் ஆபத்தை இன்று அப்படியான அபிவிருத்தியடைந்த மொழி பேசுகிறவர்கள் காண்பதில்லை. இதனால் உலக நாகரிகத்தின் ஒரு உன்னத சிகரம் கரைந்து சமநிலத்தளவுக்கு வந்துவிடும். அதனால் நட்டம் அடைவது மனித சமுதாயமே என்பதை அணுவளவும் சிந்திக்கிறார்கள் இல்லை.

மட்டக்களப்பை மையமாகக் கொண்டு இயங்கும் மூன்றாவது கண் உள்ளூர் அறிவுதிறன் செயற்பாட்டுக்குழு 2007 மாசி 21ம் நாள் சர்வதேச தாய்மொழித் தினத்தைக் கொண்டாடியது. சிறுதுண்டுப் பிரசுரங்களை வெளியிட்டது.

வங்காள மொழியை அரச கருமமொழியாக்கும் பொருட்டுப் போராடி உயிர் துறந்த நான்கு மாணவர் நினைவாகத் தொடங்கிய இத்தினம் சர்வதேச அமைப்புக்களின் ஆதரவினால் யுனெஸ்கோவினால் சர்வதேச தாய்மொழித் தினமாக 1999ல் பிரகடனம் செய்யப்பட்டது. உலகப் பொதுமொழி ஒன்றை வளர்ப்பது பல வசதிகளை மனித இனத்துக்குத் தரும் ஆயினும் அதற்காகத் தாய்மொழிகளை அழியவிடுவது மனித இனம் இதுவரை மொழிமூலம் வளர்த்த பண்பாட்டுச் சிறப்பு அம்சங்களைக் கைவிடுவதாகும்.

"21ம் நூற்றாண்டில் தமிழும் தமிழரும்" என்ற தலைப்பில் நல்ல சிந்தனைகளை இச்செயற்பாட்டுக்குழு வெளியிட்டுள்ளது. புலம்பெயர்ந்து உலகெங்கும் வாழும் தமிழர் தாம் வாழும் நாட்டு மொழிகளில் மட்டும் தம் பிள்ளைகளைப் பயிற்றுகின்றனர். இவர்கள் தம்முள் தொடர்பு மொழியாகத் தமிழைப் பயன்படுத்துவதற்குரிய வழிவகைகளைக் கையாளுவது ஆக்க பூர்வமாக முன்னெடுப்பதும் நன்று. புலம்பெயர்ந்தோர் தாம் தற்போது ஏற்றுக் கற்கும் டச்சு, ஜேர்மன், பிரெஞ்சு மொழிகள் மூலமாகத் தமிழுக்கு மொழி பெயர்ப்புகளைச் செய்வதும், தமிழரின் அடுத்த கட்ட வளர்ச்சிக்கு உதவும். இதே போல் தமிழில் தோன்றிய உயர்சிந்தனைகளை, இலக்கிய, மெய்யியற் கருத்துக்களை அந்த மொழிகள் மூலம் வெளியிடுவதும், தமிழும் தமிழரும் செழிப்படைய வழி செய்யும்.

இக்கருத்து மொழிக்கர்வம் அல்லது மொழிவெறியின் அடிப்படையில் முளைத்தது அன்று. பன்மொழிப் பண்பாட்டினூடாக உலக ஒருமைப்பாடு என்ற நற்சிந்தனையே இதன் அடிநாதமாகும்.

மகாத்மா காந்தியடிகள் மும்மொழிக் கொள்கையை வகுத்து தாய்மொழி, நாட்டு மொழி, உலக மொழி என மூன்றினாலும் மனிதன் உயர்ந்தவைகளைச் சிந்திக்க வழி செய்தார். மொழி வெறிகாரணமாக ஒன்றையோ, இரண்டையோ வெறுப்பதாக நடித்து பாமர மக்களை வழி தவறச்செய்த அரசியல் வாதிகள் இன்று தம் தலையில் தாமே மண் அள்ளிப் போட்டதை உணர்கின்றனர்.

பன்மொழிகளைப் பேசும் மக்களினம் வாழும் நாடுகள் முதலில் சிறு பான்மையினருக்கும் தம்மொழியை வளர்த்து அதன் மூலம் தம்தம் பூரணத்துவத்தை எய்த வாய்ப்பு அளிக்குக.

**"எங்களது மொழி போல் எல்லா மொழிகளும் மலர்க**
**உலகம் முழுவதும் பன் மொழிகளின் பூவனம் ஆகுக."**

## சத்தியம் ஈன்ற சாந்த குணாளன்

இந்திய நாட்டின் அரசியல் நிகழ்வில்
அண்ணல் காந்திஜி ஒருபெரும் யுகம்
முந்தி நின்ற மிடிமையை விரட்டிட
முன்னிடம் நின்றுழைத்த மூதறிஞர்
அன்னியர் வகுத்த அடக்கு முறையை
அடியோடு வெறுத்த அகிம்சா மூர்த்தி
சந்ததி சந்ததியாக நினைவு கூர
சத்தியம் ஈன்ற சாந்த குணாளன்
இந்தியர் அனைவரும் தன்மக்களென்று
இருட்சிறையிலும் கார்ச்சித்த தேசபிதா
பந்தியில் சமத்துவத்தைப் பேணி மகிழ்ந்த
பாரத அன்னையின் தவப்புதல்வன்
செந்திருவனைய பாரத மாதாவின்
தாள் விலங்கொடித்த கடமை வீரன்
அந்தக அரசை சத்தியாக் கிரகத்தால்
அடிபணிய வைத்த சுதந்திர வேங்கை.

கலைநிதி
யாழ்ப்பாணம்

உழைப்பை கேவலமாக எண்ணி உதாசீனப்படுத்திய அன்றே நாட்டிற்கு கெட்ட காலம் பிறந்துவிட்டது என்றார் மகாத்மா.

## அன்பர் தபால்

"பெரியார்" திரைப்படம் தொடர்பான சிறிய விமர்சனத்தை 2007 ஆக்ஸ்ட் - செப்டெம்பர் "காந்தியம்" தாங்கி வந்தது. உண்மையில் பெரியாருடைய கொள்கைகளை ஏற்றுக் கொள்ளாதவர்களும் கூட விமர்சிக்கத்தக்க முறையில் ஒரு திரைப்படம் வெளியாகியிருப்பது எவ்வளவு குறைபாடுகள் இருப்பினும் வரவேற்கத்தக்க முயற்சி என்றே நான் நினைக்கின்றேன்.

இ.இராசவேல்
யாழ்ப்பாணம்

# அண்ணலின் அகிம்சை நெறி

பேராசிரியர் அ.கி.பரந்தாமன் எம்.ஏ

பாழ்பட்டுக் கிடந்து தாழ்நிலையுற்றிருந்த பாரத நாடு விடுதலை பெறுவதற்கு அண்ணல் காந்தியடிகளார் திண்ணமாக மேற்கொண்ட சில நெறிகளுள் அகிம்சை நெறியே தலையாய நெறியாகும். இது ஆன்மீக சக்தியை அடிப்படையாகக் கொண்டது. இந்த அகிம்சை நெறி, அமைதியாக நெஞ்சுரத்தோடு அஞ்சாது எதிர்க்கும் முறையேயாகும். அகிம்சை நெறியில் துன்புறுத்துபவர்களைத் தாக்கும் வன்முறை கிடையாது. பகைத்துக் கொள்ளும் புன்மைத்தன்மை இல்லை. அநீதியை அஞ்சாது அமைதியாக எதிர்க்கும் நீதிமுறையே இருக்கும். இந்நெறியில் எதிரிகளை மாற்றக்கூடிய ஆற்றல் இருக்கும். ஆன்மீக ஆற்றல் மிகுந்திருக்கும். சகிப்புத்தன்மை மிளிரும். வீரம் விளங்கும், எதையும் தாங்கும் இதயம் வெளிப்படும், தியாகம் தலைசிறந்து நிற்கும்.

அகிம்சை நெறியை மேற்கொள்ளும் போது எதிரிகளைத் துன்புறுத்தாத எதிர்ப்பைக் காட்ட வேண்டும். அண்ணல் காந்தி அடிகளார் இதை முப்பது ஆண்டுகளாகப் பயன்படுத்திக் காட்டி இறுதியில் வெற்றி கண்டார். இதில் ஒரு சில வேளைகளில் மக்கள் வன்முறைகளைக் காட்டிய போது காந்தியடிகளார் மனம் நொந்து இதை நிறுத்தி வைத்ததும் உண்டு. மனித வாழ்விலிருந்து வன்முறை அறவே நீங்க வேண்டும் என்பதே அவரது குறிக்கோள். அவர் வன்முறையற்ற மன்பதையை சமுதாயத்தை நிருமாணிக்க முயன்றார். அதற்காகவே அவர் அகிம்சைக் கோட்பாட்டை வற்புறுத்தினார்.

அகிம்சை நெறி வலிமையற்ற கோழைகளின் கோட்பாடு அன்று. வலிமையுற்ற வீரர்களின் கோட்பாடேயாகும். அகிம்சையைக் கொண்ட எதிர்ப்பு முறைதான் அந்த நெறி எனலாம். ஒரு விதத்தில் அது ஒத்துழையாமை இயக்கமுமாகும். அண்ணல் இந்த அகிம்சை முறையை இந்திய நாட்டுக்கு மட்டும் அளிக்கவில்லை. உலகுக்கே அளித்திருக்கிறார். அரசியல் வானத்தில் போர் மேகங்கள் சூழ்ந்து கொண்டிருக்கும் இந்நாளில், சில நாடுகள் ஒன்றுக் கொன்று போர் புரிந்து கொண்டிருக்கும், இக்காலத்தில் சில நொடிகளில் உலகையே அழித்துவிடக் கூடிய அணுகுண்டுகளை சில நாடுகள் வைத்திருக்கும் அச்சமயத்தில், இனி உலகத்தின் எதிர்காலம் எப்படியிருக்குமோ என்று அதிர்ச்சியுற்று மனம் கலங்கி மக்கள் அமைதியற்று நிற்கும் இவ்வேளையில், காந்தியடிகளார் உலகுக்கு அளித்த அகிம்சை நெறியே எல்லா நாட்டினரும் மேற்கொள்ளக் கூடிய நெறி என்பதில் ஐயமில்லை. வன்முறையை வன்முறையால் போக்கும் காலம் மலையேறிவிட்டது. உலகில் அமைதி நிலவுவதற்கு அகிம்சை முறையே ஏற்றதாகும். எந்தச் சிக்கலை நீக்குவதற்கும் இந்நெறியே ஏற்றதாகும் என்பதில் ஐயமில்லை.

நன்றி: அண்ணல் காந்தி மலரஞ்சலி, வானதி பதிப்பகம், சென்னை.

# கங்கை நிகர் கெங்காலட்சுமி



ஊர்காவற்றுறைத் தொகுதியில் உள்ள சுருவில் என்னும் சிறுகிராமம் பனைவளமும் நிலவளமும் செல்வர்களும் நிறைந்த கிராமமாக விளங்கியது. அக்கிராமத்தை செல்வங்கொழிக்கும் ஊராக்கும் பெரும்பேறு பெற்றவர்கள் இளையதம்பி குடும்பத்தவர்கள். அக்குடும்பத்தில் திரு.இளையதம்பி சுப்பிரமணியம் பிரபல வர்த்தகராக கொழும்பில் திகழ்ந்தார். அன்னாரின் அருந்தவத் துணைவியாரே திருமதி கெங்காலட்சுமி ஆவார்.

அன்னார் சுருவில் நாகலிங்கம் சிவக்கொழுந்து தம்பதியருக்கு மகளான 1930.01.27 இல் பிறந்தார். ஆரம்பக்கல்வியைச் சுருவிலில் கற்று ·உயர் கல்வியை இளவாலை திருக்குடும்ப கன்னியர் மடத்தில் கற்றார். அங்கு பரோபகாரம் நிறைந்த சிறந்த மாணவியாக விளங்கியதோடு அருட்சகோதரிகளுடன் அன்பாக விளங்கி சமூகசேவை மனப்பான்மையைப் பெற்று இறுதிவரை அவர்களோடு தொடர்பு கொண்டு பேருதவிகளைச் செய்தார்.

திருமதி. கெங்காலட்சுமி அவர்கள் செல்வச் சீமாட்டியாக இருந்த போதிலும் எளிமையின் உருவமாக விளங்கினார். சமயப்பற்று, சமூகப்பற்று மிகுந்த அவர் கணவரோடு சேர்ந்து சுருவில் ஐயனார் கோயில், திருக்கேதீஸ்வரம், செக்கடித்தெரு கதிரேசன் கோயில், நாகபூசணி அம்மன் ஆலயம் ஆகியவற்றின் திருப்பணிகளுக்கு முன்னின்று உதவினார். அது மட்டுமல்லாது பல்வேறு ஆலயங்களும் அவரது அறப்பணியால் நித்திய கருமப் பூசைகளும் விழாக்களும் நடத்தின.

இறுதி மூச்சு வரை வெள்ளவத்தை இராமகிருஷ்ண மடத்திற்கு வேண்டிய உதவிகளைச் செய்தார். அத்தவமகள் சமூகக் கலவரங்களாலும் சுனாமியாலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவுப் பொருட்களும் உடைகளும் விரைந்தனுப்பினார். சமூகப் பணிகளில் மறைமுகமாக நின்று பொருள் உதவி செய்தார்.

அகில இலங்கை காந்தி சேவாசங்க இரத்மலானை சர்வோதய மாணவர்களுக்காகத் தமக்குத் தெரிந்தவர்களின் வீடுகளில் சர்வோதய பாத்திரம் வைத்து பிடி அரிசியும் ஒரு சதமும் போட ஒழுங்கு செய்தார். இறுதிவரை அங்கத்தவராக இருந்து அரும்பணியாற்றினார்.

அன்னார் தன் அருமைக் கணவரின் அகால மரணத்தினால் மனமுடைந்தாலும் வாளாதிருக்காது மனதளவில் துறவியாகி மேலும் பல நற்கருமங்களைச் செய்து தம்மை வந்தடைந்தோருக்கு மனஆறுதல் அளித்து பொருளுதவி நல்கி தமர் பிறர் என்று பாராது உதவினார்.

கடந்த கால உள்நாட்டுப் போரில் அழிந்த மகாதேவ ஆச்சிரம புனருத்தாரணத்திற்கு உதவியதோடு மகாதேவ மாணவர் இல்லத்திற்கும், வன்னேரி முதியோர் இல்லத்திற்கும் தமது உறவினர், பிள்ளைகள், நண்பர்களிடம் கூறி நிதி உதவி அளிக்கச் செய்தார்.

திருமதி.கெங்காலட்சுமி அவர்களின் புதல்வியரும் சமூகப்பணியில் ஈடுபட்டு வருவது அன்னாரின் வழிகாட்டல் என்பதில் ஐயமில்லை. திருமதி.கெங்காலட்சுமி அவர்கள் 2005.12.24 இல் இறைவனடி சேர்ந்த செய்தியை அறிந்தவர்பட்ட துயரத்திற்கு அளவில்லை. இறுதிக்கிரியையின் போது திரண்டு வந்த மகளிர் மலரஞ்சலி செய்து பஜனை செய்தது அன்னாரின் நற்பணிக்குச் சான்றாகும். திருமதி கெங்காலட்சுமியின் இரண்டாம் ஆண்டு மறைவு தினத்தை காந்தி சேவா சங்கம் தனது ஆத்மார்த்த நன்றியாக நினைவு கூருகிறது.

## சமூகப் பணிகளின் சரித்திர நாயகன் மில்க்வைற் கனகராசா

(தோற்றம் 1927.11.02, மறைவு 1998.07.02)

இந்த உலக வாழ்வியல் பற்றிச் சிந்திக்கும் போது பிறப்பும் இறப்பும் அன்றாடம் நடைபெறும் ஒரு இயற்கை நியதியாகவுள்ளது. இந்த விதத்திலே மானிடராகப் பிறப்பது அரிது என்பது ஆன்றோர் வாக்கு. ஆதலின் மானிடராகப் பிறவி, உலகப்பிறவிகள், யாவிலும் மேலானதாகக் கருதப்படுகின்றது.

இவ்விதம் மானிடப்பிறவி எடுப்பவர்கள் எல்லோரைப் பற்றியும், இருப்பவர்கள் சிந்திப்பது இல்லை. ஊரிலோ, ஒரு நாட்டிலோ அன்றி இத்தேசத்திலோ விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலர் தான் மற்றவர்கள் மனதில் இடம்பிடிப்பவர்களாக உள்ளனர். இவ்விதம் மற்றையோர் மனங்களில் இடம்பிடிக்கும் ஒருவரே புகழுடம்புடையவராகின்றார். இவர்களே இறந்தும் இறவாதவர்களாக மக்கள் மனதிலே நிலைத்திருக்கின்றவர்கள் ஆவார்.

தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று

என்னும் உலகப் பொதுமறையான திருக்குறள் இதனை சிறப்பாக எடுத்துக் கூறுகின்றது.

இவ்விதமாக நாம் சிந்திக்கும் போது யாழ்ப்பாணத்திலே மூலை முடுக்கெங்கும் தெரிந்த ஒரு பெரியாராக வண்ணார்பண்ணையில் கந்தையாபிள்ளை - மீனாட்சிப்பிள்ளை அவர்களின் இல்லற நல்லறப் பேறாக வந்து உதித்தவர் ஸ்ரீமான் கனகராசா ஆவார். பெற்றோர் காட்டிய வழியில் சவர்க்காரம், கிருமிநாசினி, மரம்நடுகை, நன்னூல் வெளியீடுகள், நல்லறப்பணிகள் ஆகியன செய்வதன் மூலம் எல்லோர் மனத்திலும் நல்லிடம் கொண்டவராவார். சிறியோர் முதல் பெரியோர் வரை சகல தரத்தினருக்கும் தேவையான பயனுள்ள நற்பணிகளைப் புரிந்தவர் இவராவார்.

பெரியார் கனகராசா அவர்கள் தமது உழைப்பை சைவத்திற்கும், தமிழிற்கும், தமிழ் மண்ணிற்கும் ஈந்த தனித்துவமான கொடைவள்ளலாக விளங்கினார். திருமுறைகளையும் திருமுறை தந்த சமயச் சான்றோர்களையும் எம்மக்களுக்கு எளிதாகவும், இலகுவாகவும் யாவரும் விரும்பக்கூடிய விதத்திலும் சிறு சிறு கைநூல்கள் வாயிலாகவும் மனதைக் கவரும் பக்தி வடிவான அட்டைகள், உருவங்கள் போன்றவற்றாலும் மனத்திருந்திச் சைவத்துடன் தமிழும் நிலைபெற ஆவனசெய்த இப்பெரியாரின் பணிகள் காலத்தால் அழியாதனவாகும்.

ஆலயக் கும்பாபிஷேகங்கள், விழாக்கள், சமயச்சிறப்பு, நிகழ்ச்சிகளிலும் மக்கள் கூடும் பல்வேறு இடங்களிலும் மில்க்வைற் ஸ்தாபனத்தாரின் பணிகள் பளிச்செனத்தென்படும்.

முன்பள்ளிச் சிறார்களுக்கு அரிச்சுவடி முதல் முதுபெரும் முதியோர்க்குப் பயன்படக்கூடிய பல்துறைச் செயற்பாட்டிலும் ஆர்வமுடன் பங்குகொண்டு எந்த இடத்தில் எதைச் செய்ய வேண்டுமோ, அதைத் தெரிந்து விரும்பிப் பிறர்க்குப் பயன்படக் கூடியதாகப் பணி பல புரிந்த பண்பாளர்தான் பெரியார் கனகராசா அவர்கள். நாட்டின் சைவ,தமிழ் வளர்ச்சியுடன் பொருளாதாரத்தை வளம் பெறச் செய்யவும், சுதேசிய உற்பத்திப் பொருட்களை வளப்படுத்தவும் இவர் செய்த பணி தனித்துவமானதாகும்.

கற்பக தருவான பனைகள் அழியாதிருக்கப் பனம் விதைகளை நாட்டுவதற்கு எல்லோரையும் ஊக்குவித்தார். ஆலயங்கள் தோறும் தலவிருட்சங்கள், நெல்லி, கடம்பு, வன்னி, ஆல், அரசு, கொன்றை, மற்றும் பூமரங்களை நாட்டுவதற்கு அவற்றைத் தேடிச் சேகரித்து ஆலயங்களுக்கெல்லாம் சென்று கொடுத்து உதவினார்.

ஊனமுற்றவர்களுக்கு முச்சக்கரவண்டி, நாற்காலி போன்றன கொடுத்தும் ஏழைச் சிறுவர்களுக்கு கல்வி உபகரணங்கள், நூல்கள், அன்பளிப்புச் செய்தும் எல்லோரும் வாழவேண்டும். உலகில் இன்புற்றிருக்க வேண்டும் என்ற நன்மைப் போக்குடன் பல பணிகளைச் செய்தார்.

**(4ம் பக்கம் பார்க்க)**



**மில்க்வைற் மண்டபத்தில் மகாத்மா காந்தி விழா நடைபெற்ற போது சிவதர்மவள்ளல் க.கனகராசா அவர்கள் காந்தியடிகளின் கருத்துரைகள் அடங்கிய சட்டகத்தை பாடசாலை மாணவர்களுக்கு வழங்கிய போது**

## ஆபாசத் திரைப்படங்களைத் தடை செய்க! "சலன சித்திரம்" அமைப்பு கோரிக்கை

"KEEP THE CITY CLEAN" என்ற கொழும்பு மாநகர சபையின் அழகுமிகு வாசகம் நடைமுறையில் அர்த்தமுள்ளதாகவும் உயிர்ப்புள்ளதாகவும் இருக்கவேண்டும். சுற்றுப்புறச் சூழலின் சுத்தம் பற்றிச் சிந்திப்பவர்கள் முதலில் மக்களின் சிந்தனையைச் சுத்தம் செய்ய முன்வரவேண்டும். இதனொரு கட்டமாக, சினமா (Cinema)க்கலை என்ற பெயரில் கொழும்பு மாநகர சபையின் நிர்வாக எல்லைக்குள் இடம்பெறும் சமூகத் தீங்கை உடனடியாக முடிவுக்குக் கொண்டுவர வேண்டும். விபசாரம் மற்றும் பாலியல் குற்றச் செயல்களின் திடீர் அதிகரிப்புக்கு நேரடிக் காரணமாகத் திகழும் ஆபாசத் திரைப்படங்கள் கொழும்புத் திரையரங்குகளில் தாராளமாகத் திரையிடப்படுகின்றன. கொழும்பு வாழ் மக்களின் சிந்தனையை அசுத்தப்படுத்தும் மேற்படி சமூகக் குற்றத்துக்குக் கேளிக்கை வரியை அறவீடு செய்வதன் மூலமாகக் கொழும்பு மாநகர சபை இத்தீங்கை அனுமதித்தும் ஊக்குவித்தும் வருகிறது. சமூகம் பற்றிய சரியான புரிதலுடன் "KEEP THE CITY CLEAN" என்ற வாசகத்துக்கு உரிய உயரிய மதிப்பளிக்கும் வகையில் ஆபாசத் திரைப்படங்களின் திரையிடலைக் கொழும்பில் முற்றாகத் தடைசெய்யுமாறு தங்களைத் தாழ்மையுடன் வேண்டிக் கொள்கின்றோம். சமூக மேம்பாட்டுக்காகத் தங்களால் திட்டமிடப்படும் எத்தகைய முற்போக்கான நடவடிக்கையை ஆதரிக்கவும், அதேவேளை ஆபாசத் திரைப்படங்களின் தடையை வலியுறுத்தி அறவழியில் போராடவும் நாம் ஆயத்தமாயுள்ளோம் என்று 'சலனசித்திரம்' அமைப்பின் நிறுவுனர் க.தேவதாசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## காந்தியின் கடைசி அஸ்தி கரைப்பு

மும்பை : மகாத்மா காந்தியின் கடைசி அஸ்திக்கலசம் 30.01.2008 புதன்கிழமை அரபிக்கடலில் கரைக்கப்பட்டது.

மகாத்மாகாந்தி 1948 ஆம் ஆண்டு, ஜனவரி 30 ஆந்திகதி டெல்லியில் சுட்டுக்கொல்லப்பட்டார். 30.01.2008 அவரது 60வது ஆண்டு நினைவு நாள் என்பது குறிப்பிடத்தக்கது.

காந்தியின் மறைவுக்குப் பின்னர் அவரது அஸ்தி நாடு முழுவதும் உள்ள பல்வேறு ஆறுகள், நதிகளில் கரைக்கப்பட்டன. ஒரே ஒரு அஸ்திக்கலசம் மட்டும் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்தது.

கடலில் கரைக்கப்பட முன்னர் அஸ்திக்கலசத்திற்கு ஏராளமான மாணவ மாணவியர், சுற்றுலாப் பயணிகள், பொதுமக்கள் திரண்டு வந்து கடைசி மரியாதை செலுத்தினர்.

மூலம்:- 31.01.2008
தினக்குரல்

## ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன.

"காந்தீயம்" பத்திரிகை தொடர்பான உங்களின் கருத்துக்கள் மற்றும் காந்திய நோக்கிலான ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன. அவற்றின் பொருத்தப்பாடு, தரம் என்பவற்றின் அடிப்படையில் அவை பிரசுரிக்கப்படும்.

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தினதும் "காந்தீயம்" பத்திரிகையினதும் 60 ஆவது ஆண்டுப் பூர்த்தியை முன்னிட்டு ஆண்டு மலர் ஒன்றினை வெளியிட எண்ணியுள்ளோம். சங்கத்தின் கடந்த காலப் பணிகளில் ஈடுபட்டும் அவை பற்றிய செய்திகளைத் தெரிந்தும் வைத்துள்ள பெரியோரிடமிருந்து ஆக்கபூர்வமான கருத்துக்களை எதிர்பார்க்கின்றோம். மேலும் சங்கத்தின் வெளியீடுகள், புகைப்படங்கள் போன்ற ஆவணங்களை சேகரித்து வைத்திருக்கும் அன்பர்கள் அனுப்பி உதவினால் எமது பணிக்குப் பேருதவியாக இருக்கும்.

தொடர்புகளுக்கு:

**ஆசிரியர்**
**"காந்தீயம்"**
**வாணி கணனிப்பதிப்பகம்**
**இல.61B, 1ம் குறுக்குத்தெரு,**
**வவுனியா.**

## அஞ்சலி



காந்தி ஐயா என்று அழைக்கப்படும் திருகோணமலை முத்துக்குமாரசாமி கோயிலடியைச் சேர்ந்த பொ. கந்தையா அவர்களின் அன்புத்துணைவியார் திருமதி. கந்தையா இராசநாயகி (ஓய்வு பெற்ற ஆசிரியர்) அவர்கள் 2007.10.04 அன்று காலமானார். அன்னாருக்கு அகில இலங்கை காந்தி சேவா சங்கம் தனது அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறது.

பொ. கந்தையா அவர்கள் எமது சங்கத்தின் நிர்வாக சபை உறுப்பினரும் மூத்த காந்தியவாதியும் ஆவார்.

## காந்தி கூறிய ஏழு சமூக பாவங்கள்

1. உழைக்காமல் பெறுகின்ற செல்வம்
2. ஒழுக்கம் இல்லாத கல்வி
3. நேர்மை இல்லாத வியாபாரம்
4. தியாக உணர்வற்ற இறைவழிபாடு
5. மனித உணர்வற்ற அறிவியல் வளர்ச்சி
6. மனச்சாட்சி இன்றி அனுபவிக்கும் இன்பம்
7. கொள்கை இல்லாத அரசியல்

இப்பத்திரிகை 171, முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் வசிக்கும் திரு.சோ.க.தம்பிப்பிள்ளை அவர்களால் அகில இலங்கை காந்தி சேவா சங்கத்திற்காக வவுனியா, 1ஆம் குறுக்குத்தெரு, இலக்கம் 61-B, இல் அமைந்துள்ள வாணி கணினிப் பதிப்பகத்தில் 2008ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
இதழாசிரியர்: எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி